# நடப்பு நிகழ்வுகள்- மார்ச் 06 - 2018

❖ தமிழ்நாட்டில் இரண்டு சாலை மறுவாழ்வு திட்டங்களுக்கு மத்திய சாலை போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது. தேசிய நெடுஞ்சாலை எண் 234 (குடியாத்தம் புறவழிச்சாலை முதல் வேலூர் புறவழிச்சாலை வரை) நெடுஞ்சாலை எண் 383 (திண்டுக்கல் நத்தம் பிரிவு)

❖ மார்ச் 4 அன்று மெக்சிக்கோவில் நடைபெற்ற உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்திய வீராங்கனை “மானு பாகர்” 10மீ “ஏர் பிஸ்டல்” பிரிவில் 237.5 புள்ளிகள் எடுத்து தங்கம் வென்றார்.

❖ சென்னை பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறைசார்பில் “காலம் தொட்டு சைவ சித்தாந்தத்தின் வளர்ச்சி’ என்ற தலைப்பிலான கருத்தரங்கு மார்ச் 4,5 அன்று நடைபெற்றது.

❖ உலகலவில் 133 நாடுகளின் இராணுவ தடவாளங்கள், இயற்கை வளங்கள், தொழில், புவியியல் அடிப்படையிலான பல்வேறு அம்சங்கள், மனித சக்தி ஆகியவற்றின் அடிப்படையில் இராணுவ வல்லமை உள்ள நாடுகளின் பட்டியலை குளோபல் ஃபயர்பவர் (Global Firepower) எனும் அமைப்பு வெளியிடப்பட்டுள்ளது. இப்பட்டியலில் இந்தியா 4வது இடம் பெற்றுள்ளது. அமெரிக்கா, இரஷ்யா, சீனா முதல் மூன்று இடங்களை பெற்றுள்ளது.

❖ இலங்கை நாட்டின் கண்டி நகரில் 5.3.18 அன்று சிங்களர் மற்றும் முஸ்லீம் இடையே ஏற்பட்ட கலவரத்தை தொடர்ந்து 10 நாட்களுக்கு அவசர நிலை பிரகடனம் அமல்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு அமைச்சர் எஸ்பி.திஷ்ஷநாயக்கர் தெரிவித்துள்ளார்.

❖ தஞ்சாவூரில் அமைந்துள்ள தமிழ்ப் பல்கலைக்கழகமும், மோரீஷஸ் நாட்டின் தமிழ்க் கோயில்களின் கூட்டமைப்பும் இணைந்து தமிழர்களின் தத்துவம் தொடர்பான ஆய்வுகளில் ஒன்றிணைந்து செயல்படும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (05-06-18) செய்து கொண்டன. மோரீஷஸ் நாட்டின் துணை அதிபர் பரமசிவம் பிள்ளை வையாபுரி மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் க. பாஸ்கரன் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

- காவல் நிலையப் பணியை மேம்படுத்துவதற்கும், காவல் நிலையத்தை பொதுமக்கள் எளிதாக அணுகுவதற்கும் குறிப்பாக சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையங்கள் பொதுமக்கள் தேவையறிந்து செயலாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கான நோக்கில், ஐ.எஸ்.ஓ. 9001-2000 சான்றிதழ் சென்னையின், அம்பத்தூர் காவல் மாவட்டத்தில் உள்ள திருமுல்லைவாயல், அம்பத்தூர் தொழிற்பேட்டை,நசரேத்பேட்டை, போரூர் எஸ்.ஆர்.எம்.சி., குன்றத்தூர், ஆவடி டேங்க் பேக்டரி,பட்டாபிராம் ஆகிய 7 காவல் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- **ஆஸ்கர் விருதுகள் 2018 : 90-வது ஆஸ்கர் விருது வழங்கும் விழா லாஸ்ஏஞ்சலஸ் நகரில், 05-03-2018 அன்று நடைபெற்றது.** ஆஸ்கர் விருது வழங்கும் நிகழ்ச்சியை அமெரிக்காவின் பிரபல டி.வி. தொகுப்பாளர் ஜிம்மி கிம்மல் தொகுத்து வழங்கினார்.
    - சிறந்த நடிகர் - கேரி ஓல்டுமேன் (டார்க்கஸ்ட் ஹவர் ) (Darkest Hour)
    - சிறந்த படம் - ‘தி ஷேப் ஆப் வாட்டர்’ (The Shape of Water)
    - சிறந்த டைரக்டர் - கில்லெர்மோ கொல்டோரோ (தி ஷேப் ஆப் வாட்டர்)
    - சிறந்த நடிகை - பிரான்சிஸ் மெக்டர்மென்ட் (திரி பில்போர்ட்ஸ் அவுட்சைட் எப்பிங் மிசவுரி)(Three Billboards Outside Ebbing)
    - சிறந்த ஒளிப்பதிவாளர் - ரோஜர் டிக்கின்ஸ் (பிளேட் ரன்னர்)
    - சிறந்த வெளிநாட்டு படம் - ஏ பெண்டாஸ்டிக் உமன் (சிலி)
    - சிறந்த ஒலிக்கலவை - டன்கர்க் திரைப்படம்
    - சிறந்த முழுநீள ஆவணப்படம் - இகாரஸ்
    - சிறந்த துணை நடிகர்-சாம் ராக்வெல் (திரி பில்போர்ட்ஸ் அவுட்சைட் எப்பிங் மிசவுரி)
    - சிறந்த துணை நடிகை-ஆலிசன் ஜேனி (ஐ டான்யா)
    - சிறந்த அனிமேஷன் படம்-கோகோ
    - சிறந்த குறும்பட இயக்குனர்-கிறிஸ் ஓவர்டன்
    - சிறந்த திரைக்கதையாசிரியர்-ஜோர்டன் பீலே (கெட் அவுட்)
    - உடை வடிவமைப்பு-மார்க் பிரிட்ஜஸ் (பாந்தம் திரட்)

- ஆந்திரப்பிரதேசம் விசாகப்பட்டினம் மாவட்டத்தில் அரக்கு பள்ளத்தாக்கில் பழங்குடியின சமூகத்தினர் பயிர் செய்யும் காபியின் தனி அடையாளத்தை பாதுகாப்பதற்காக புவியியல் குறியீடு திட்டத்தின்கீழ் அதனைப் பதிவு செய்வதற்கு காபி வாரியம் மனு செய்துள்ளது. அரக்குப்பள்ளத்தாக்கில் பயிராகும் அராபிகா (Arabica) காபி உயர்தரமான சிறப்பு காபி என சர்வதேச அளவில் புகழ்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது